


வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் வழித்தடத்துக்கான புதிய மெட்ரோ ரெயிலை படத்தில் காணலாம்.

## வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் வழித்தடத்துக்காக

# புதிய மெட்ரோ ரெயில் வருகை

## ஜூன் மாதம் முதல் ஓடுகிறது

சென்னை,அக்.20– வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் 9 கி.மீட்டர் தூர வழித்தட பாதைக்காக புதிய மெட்ரோ ரெயில் சென்னைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

### மெட்ரோ ரெயில்

சென்னை மாநகர போக்குவரத்து நெருக்கடியை குறைப்பதற்காக மெட்ரோ ரெயில் திட்டம் உருவாக்கப் பட்டது.

முதல் கட்டமாக வண் ணாரப்பேட்டை – விமான நிலையம் பரங்கிமலை– சென்ட்ரல் இடையே மெட்ரோ ரெயில் சேவை நடந்து வருகிறது.

முதல் கட்ட திட்டத் தின் நீட்டிப்பாக வண்ணாரப் பேட்டை – விம்கோ நகர் இடையே ரூ.3,700 கோடியில் 9 கி.மீட்டர் மெட்ரோ ரெயில் பாதை அமைக்கும் பணி நடந்து வருகிறது.

### புதிய ரெயில்

வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் வழித்தடத்தில் மெட்ரோ ரெயில் பயணிகள் சேவை வருகிற ஜூன் மாதம் தொடங்குகிறது.

இதற்காக 10 புதிய ரெயில்கள் ஆந்திர மாநிலம் ஸ்ரீசிட்டியில் தயாரிக்கப்பட்டு வருகிறது. தற்போது முதல் ரெயில் தயாராகிவிட்டது. அந்த ரெயில் கோயம்பேடு மெட்ரோ ரெயில் டெப் போவுக்கு கொண்டு வரப் பட்டுள்ளது.

கோயம்பேடு மெட்ரோ டெப்போ நிலையத்தில் சில மாதங்கள் ஆய்வு செய்யப் படுகிறது. மெட்ரோ ரெயில் பெட்டிகளில் மழை தண்ணீர் ஒழுகாதவாறு மேல் தள கட்டமைப்பு சரி பார்க் கப்படுகிறது. கோயம்பேடு மெட்ரோ டெப்போவில் உள்ள தண்ட வாளத்தில் புதிய மெட்ரோ ரெயிலை ஓட்டி பார்த்து 'ஸ்பீடு' மற்றும் 'பிரேக்' பரிசோதனை செய்யப்படுகிறது.

ஆய்வு முடிந்த பிறகு வண் ணாரப்பேட்டை – விம்கோ நகர் வழித்தட சேவையில் பயன்படுத் தப்படுகிறது.

### 42 ரெயில்கள்

முதல் கட்ட மெட்ரோ ரெயில் சேவையில் தற் போது 42 ரெயில்கள் பயன்படுத்தப்பட்டு வரு கிறது. தற்போது வண்ணாரப் பேட்டை – விம்கோநகர் வழித்தட பாதைக்காக 9 ரெ யில்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. மெட்ரோ ரெயில் பராமரிப்பு பணிக் காக விம்கோ நகரில் 10 ரெயில் கள் நிறுத்தும் வசதி யுடன் கூடிய மெட்ரோ ரெயில் பணிமனை கட்டப் பட்டு வருகிறது.